இன்றைய வேளாண் செய்திகள்

3.04.2013 A.M

## விவசாயிகளுக்கு ரூ.60.79 கோடி நிவாரணம்'

பெரம்பலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 1 லட்சத்து 58 ஆயிரத்து 975 விவசாயிகளுக்கு, ரூ. 60.79 கோடியில் நிவாரணம் வழங்கப்படுகிறது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் அருகே எசனை ஊராட்சியில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் வறட்சி நிவாரணம் வழங்கும் பணியை வியாழக்கிழமை தொடங்கிவைத்த ஆட்சியர் மேலும் கூறியது:

பெரம்பலூர் மாவட்டத்தின் பிரதான சாகுபடியான மக்காச்சோளம், பருத்தி, சின்ன வெங்காயம் ஆகியவற்றை 1,93,364.24 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த விவசாயிகள் பாதிக்கப்பட்டனர்.

இதில், நீர் பாசன வசதியுடன் பயிர் செய்த நெல் பயிர் 7,144.83 ஏக்கரிலும், எண்ணெய் வித்துப் பயிர்கள் 1,537.63 ஏக்கரிலும், வெங்காயம் 11,700.75 ஏக்கரிலும் பாதிக்கப்பட்டது.

மேலும் மானாவாரியில் சாகுபடி செய்த எண்ணெய் வித்து பயிர்கள் 469.66 ஏக்கரிலும், பருப்பு வகை பயிர்கள் 1,880.97 ஏக்கரிலும், நீர் பாசன வசதி கொண்ட பருப்பை வகை பயிர்கள் 305.83 ஏக்கரிலும், பருத்தி பயிர் 57,397.88 ஏக்கரிலும், மக்காச்சோள பயிர் 1,12,926.69 ஏக்கரிலும் என மொத்தம் 1 லட்சத்து 58 ஆயிரத்து 975 விவசாயிகளின் 1,93,364.24 ஏக்கர் பயிர்கள் பாதிப்புக்குள்ளாகின.

இதையடுத்து பெரம்பலூரை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக தமிழக அரசு அறிவித்ததைத் தொடர்ந்து அரசு உயர்மட்டக் குழுவினர் பெரம்பலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை கடந்த ஏப். 12-ல் பார்வையிட்டு அதன் அறிக்கையை தமிழக முதல்வரிடம் அளித்தனர்.

இதைத் தொடர்ந்து, பெரம்பலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 1 லட்சத்து 58 ஆயிரத்து 975 விவசாயிகளுக்கு, ரூ. 60 கோடியே 79 லட்சத்து 26 ஆயிரத்து 590 நிவாரணத் தொகை வழங்க தமிழக முதல்வர் உத்தரவிட்டார்.

மாவட்டத்தில் உள்ள 52 தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் நிவாரணத் தொகை வழங்கும் பணி வியாழக்கிழமை தொடங்கியுள்ளது.

இதில் வருவாய்த் துறை, கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் புகைப்படத்துடன் கூடிய வறட்சி நிவாரண அடையாள அட்டை வழங்கப்பட்டு, நிவாரணத்தொகை அளிக்கப்படுகிறது என்றார் ஆட்சியர்.

## வறட்சி பாதித்த வாழைகளுக்கும் நஷ்டஈடு வழங்க வலியுறுத்தல்

கன்னியாகுமரி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட வாழைப் பயிருக்கும் அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரி வருகின்றனர்.

இம் மாவட்டத்தில் கடும் வறட்சி நிலவி வருகிறது. கடந்த இருபோக சாகுபடியில் தண்ணீர்த் தட்டுப்பாட்டால் நெல் அறுவடை பாதிக்கப்பட்டது.

தண்ணீர்ப் பற்றாக்குறையால் கடைவரம்புப் பகுதிகளில் விவசாயம் நடைபெறவில்லை.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட நெற்பயிருக்கும், தென்னைக்கும் நஷ்டஈடு வழங்குவதாக அரசு அறிவித்துள்ளது.

ஆனால், பாதிக்கப்பட்ட வாழைக்கு நஷ்டஈடு வழங்குவது குறித்து அறிவிக்கப்படாதது வாழை விவசாயிகளை அதிருப்தியில் ஆழ்த்தியுள்ளது.

இதுகுறித்து ராஜாக்கமங்கலம் கிளை கால்வாய் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் டி. தேவதாஸ் ஆட்சியரிடம் அளித்த மனு:

கன்னியாகுமரி மாவட்டத்தில் நெற்பயிருக்கு அடுத்து வாழைப் பயிர் விவசாயம் அதிகமாக நடைபெற்றுள்ளது.

சுமார் 5,450 ஹெக்டேர் பரப்பளவில் வாழை சாகுபடி நடைபெற்றது. நீரில்லாததால் சுமார் 3,500 ஹெக்டேர் பரப்பில் பயிரிடப்பட்ட

வாழைகள் சேதமடைந்தன. இதனால் வாழை விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்துள்ளனர்.

எனவே, வறட்சியால் பாதிக்கப்பட்ட வாழைப் பயிருக்கும் அரசு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றார் அவர்.

## மீன்குஞ்சு வளர்ப்போர் கவனத்துக்கு

நாகை மாவட்டத்தில் மீன்குஞ்சு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள தகுதியான விவசாயிகள் மானியத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் து. முனுசாமி விடுத்துள்ள செய்திக்குறிப்பு :

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2 ஹெக்டேர் வரையிலான பரப்பில் மீன்குஞ்சு வளர்ப்புக்கு 50 % மானியத்தில் மீன்குஞ்சு, உணவு மற்றும் உரம் வழங்கும் திட்டம் தமிழக அரசின் மீன்வளத் துறை மூலம் செயல்படுத்தப்படுகிறது.

சொந்த நிலத்தில் அல்லது 10 ஆண்டு குத்தகை அடிப்படையில் அதிகபட்சமாக 2 ஹெக்டேர் பரப்பில் மீன்குஞ்சு வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோருக்கு ரூ.1 லட்சம் வரை மானியம் வழங்கப்படும். விருப்பம் உள்ள விவசாயிகள், திருவாரூர் பனகல் சாலை சிவம் நகரில் உள்ள மீன்வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்புகொள்ளலாம்.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 23.16 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 23.16 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 56 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## "வேளாண் துறையில் மாற்றம் இல்லையேல் ஏற்றம் கடினம்'

வேளாண் துறையில் மாற்றம் இல்லையேல் ஏற்றம் கடினம் என்றார் தமிழ்நாடு வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் கே. வைரவன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

முப்பது கோடி மக்களுக்கு உணவு கொடுக்க முடியாமல் தடுமாறிய இந்தியா, இன்று 125 கோடி மக்களுக்கு உணவளித்து ஏற்றமதியும் செய்கின்ற உன்னத நிலையை அடைந்திருந்தாலும் உழவர்களின் வாழ்வாதாரம் உயரவில்லை என்பதை அறியமுடிகிறது.

மின்பற்றாக்குறை, இடுபொருள் விலை உயர்வு, விளைபொருள் விலை குறைவு இவைகளால் சாகுபடி வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், குடும்பம் வறுமைக்கு தள்ளப்படுவதால் அதிலிருந்து மீள பிழைப்புக்கு வழி தேடி சொந்த நிலங்களை விற்றுவிட்டு, நகர்ப்பகுதிக்கு தினக்கூலிக்கு செல்லும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா 2-வது பசுமைப் புரட்சிக்கு பல்வேறு திட்டங்களை கொண்டுவந்துள்ளார். இருப்பினும், வேளாண் திட்டங்களில் திடீர் மாற்றம் கொண்டுவருவது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

இதற்கு பிரதானமாக விளைபொருளின் விலையை அரசு நிர்ணயித்து, தொடர்ந்து தரிசாக்கப்படும் நிலங்களை அரசு  கையகப்படுத்தி அதில் மரங்கள், தோட்டக்கலைப் பயிர் பயிரிட சட்டம் கொண்டு வர வேண்டும்.

ஒவ்வொரு வட்டாரத்திலும் விளைபொருளை மதிப்புக் கூட்டுதல், மாற்றுப் பொருள்கள் உருவாக்குதல், பருப்பு ஆலை, எண்ணெய் ஆலை, பழக்கூல் தயாரித்தல் போன்ற வேளாண் சார்புடைய தொழிற்சாலைகளை  உருவாக்க வேண்டும்.

உழவா்களுக்கு வட்டி இல்லாக்கடன் அல்லது குறைந்த வட்டிக்குக் கடன் கொடுக்க வேண்டும். மானியத்துக்குப் பதிலாக பண்ணை இயந்திரங்கள், கருவிகள் அனைத்தும் வட்டியில்லாக் கடனாக கொடுக்க வேண்டும்.

நிழற் கூடாரங்களில் காய்கறிகள், மலர் சாகுபடி, காளான் வளர்ப்பு, தேனி வளர்ப்பு, ஹைட்ரோ போனிக்ஸ் என்ற மண் இல்லா வேளாண்மை மற்றும் தோட்டக்கலை பயிர்களில் அடர் நடவு, துல்லிய பண்ணையம், எதிர்காலப் பயிர்களான சிறு மற்றும் குறு தானியங்கள் பயிரிடல் போன்ற அதிக லாபம் தரக்கூடிய பயிர்களையும், தொழில்நுட்பத்தையம் தேர்வு செய்து வேளாண்மையில் ஈடுபட வேண்டும்.

குறைந்த இடுபொருள் செலவில் அதிக வருமானம் ஈட்ட வேண்டும். கால்நடை வளர்ப்பையும் அதிகரிக்க வேண்டும்.

மருத்துவர்கள், பொறியாளர்கள், கலை என ஒன்றாம் வகுப்பில் இருந்து உயர்கல்வி வரை அனைத்துத் துறையிலும் வேளாண் பாடம்  கட்டாயமாக்கப்பட்டு, அரசு ஊதியத்தைவிட வேளாண்மையில் அதிக ஊதியம் பெறலாம் என்ற நிலையை உருவாக்க வேண்டும். இத்தகைய மாற்றம் ஒரு குடும்பத்தின் வளர்ச்சிக்காக அல்ல இது நாட்டின் வளர்ச்சிக்கானதாகும். மாற்றம் இல்லையேல் ஏற்றம் கடினம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## பாசனத்துக்கு நீரில்லாததால் குறையும் வெற்றிலை சாகுபடி!

கரூர் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பாசனத்துக்கு நீரில்லாததால் வெற்றிலை சாகுபடி குறைந்துள்ளது. இதனால், வெற்றிலை விலை ஏறுமுகமாக உள்ளது.

கரூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா பகுதிகளான மாயனூர், கிருஷ்ணராயபுரம், லாலாபேட்டை, பிள்ளப்பாளையம், திருக்காம்புலியூர், மகாதானபுரம், மகிளிப்பட்டி, கருப்பத்தூர் உள்ளிட்ட இடங்களில் காவிரிப் பாசனத்தை நம்பி விவசாயிகள் வாழை, கரும்பு, வெற்றிலை ஆகியவற்றை 15 ஆயிரம் ஏக்கரில் பயிரிட்டுள்ளனர்.

இந்தப் பயிர்களுக்கு காவிரியாற்றில் மாயனூரிலிருந்து கட்டளை புதிய வாய்க்கால், மேட்டுவாய்க்கால், தென்கரை வாய்க்கால் ஆகியவற்றின் மூலம் பாசன வசதி கிடைக்கிறது.

இந்நிலையில் காவிரியில் நீர் வரத்து குறைந்ததால் இந்தப் பகுதியில் இந்தப் பயிர்களுக்கு பெருமளவில் சேதம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் சுமார் 250-க்கும் மேற்பட்ட ஏக்கரில் பச்சை, கற்பூரம், வெள்ளை கொடி ஆகிய வெற்றிலை ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளன.

இந்த வெற்றிலை ரகங்கள் தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் இங்கிருந்து அனுப்பப்படுகின்றன.

வெற்றிலைக் கொடிக்காலில் எப்போதும் தண்ணீர் இருக்க வேண்டும். மேலும் அடிக்கடி புதிய நீரையும் பாய்ச்ச வேண்டும். இல்லையெனில் வெற்றிலை கொடிக்கால் காய்ந்துவிடும்.

காவிரியில் நீரில்லாததால், இந்தப் பகுதியைச் சேர்ந்த வசதியுள்ள விவசாயிகள் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து ஆயில் இன்ஜின்கள் மூலம் வெற்றிலை கொடிக்கால்களுக்கு நீர் பாய்ச்சி வருகின்றனர்.

இருந்தாலும், போதிய நீர் கிடைக்காததால் பாதிக்கும்மேல் வெற்றிலைக் கொடிக்கால்கள் காய்ந்துள்ளன இதனால், சாகுபடி குறைந்துள்ளது. இதனால், விலை அதிகரித்து வருகிறது.

இதுகுறித்து இந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறியது:

கடந்த மாதம், மூட்டை ரூ, 2.5 ஆயிரம் விற்கப்பட்டது. (மூட்டைக்கு 100 கவுளி) ஆனால், சாகுபடி குறைந்துள்ளதால், விலை அதிகரித்து வருகிறது. இப்போது, 100 கவுளி கொண்ட மூட்டை ரூ. 3.5 ஆயிரம் முதல் ரூ. 4.2 ஆயிரம் வரை விற்கப்படுகிறது என்றார்.

## வறட்சி நிவாரணம்: நாமக்கல்லுக்கு ரூ.56.11 கோடி ஒதுக்கீடு

வறட்சி நிவாரணம் வழங்கிட நாமக்கல் மாவட்டத்துக்கு ரூ.56.11 கோடி நிதியை தமிழக அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. தொடர்ந்து, சேதமடைந்த பயிர்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையை அவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பருவ மழை பொய்த்ததாலும், காவிரியில் போதிய தண்ணீர் திறக்கப்படாததாலும் நாமக்கல் மாவட்டத்தில் 72,882 ஹெக்டர் நிலங்களில் பயிர்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டு, ஒரு லட்சத்து 14 ஆயிரத்து 894 விவசாயிகள் நஷ்டமடைந்திருப்பது வருவாய்த் துறை கணக்கெடுப்பில் தெரிய வந்தது.

இதைத்தொடர்ந்து, தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட டெல்டா மாவட்டங்கள் தவிர பிற மாவட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிட தமிழக அரசு ரூ.1,755 கோடி ஒதுக்கீடு செய்ததுடன், 50 சதத்துக்கு மேல் மகசூல் பாதித்துள்ள குறு, சிறு விவசாயிகளுக்கு பாதிக்கப்பட்ட பயிரின் அடிப்படையில் ஏக்கருக்கு ரூ.3,000 முதல் ரூ.5,000 வரை நிவாரணம் வழங்கப்படும் என்றும் அறிவித்தது.

இந்தநிலையில், நாமக்கல் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கிட ரூ.56.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வருவாய்த் துறை அலுவலர்கள் தெரிவித்தனர். இந்தத் தொகையைப் பயிர்களின் பாதிப்பின் அடிப்படையிலும், அரசு உத்தரவின் அடிப்படையிலும் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் வழங்கிட மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

இதைத்தொடர்ந்து, நாமக்கல் கோட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையை வழங்குவது தொடர்பாக சார்ஆட்சியர் அஜய் யாதவ் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் வியாழக் கிழமை

நடத்தப்பட்டது. கூட்டத்தில் பேசிய அவர், பாதிக்கப்பட்ட பயிர்களின் அடிப்படையில் நிவாரணத் தொகையை சம்பந்தப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்திட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்தக் கூட்டத்தில் வட்டாட்சியர் ராமசாமி, வருவாய் ஆய்வாளர்கள் பலர் பங்கேற்றனர்.

## நாமக்கல்லில் முட்டைக் கொள்முதல் விலையில் 20 காசுகள் சரிவு

நாமக்கல் மண்டலத்தில் முட்டைக் கொள்முதல் விலை வியாழக்கிழமை 20 காசுகள் குறைக்கப்பட்டன.

தமிழகம், புதுச்சேரியில் வங்கக் கடலில் மீன் பிடி தடைக் காலம் அமலாக்கப்பட்டதை அடுத்து, முட்டைகளுக்கான நுகர்வு அதிகரித்து நாமக்கல் மண்டல முட்டை பண்ணைக் கொள்முதல் விலையும் ரூ.3.10 வரை உயர்த்தப்பட்டிருந்தது.

இந்த நிலையில், தமிழகம் உள்பட நாடு முழுவதும் கோடை வெயிலின் தாக்கம் பெருமளவில் அதிகரித்து வருவதை அடுத்து, முட்டை நுகர்வில் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக, வட மாநிலங்களில் முட்டை பண்ணைக் கொள்முதல் விலை வெகுவாகச் சரிந்து வருவதை அடுத்து, நாமக்கல் மண்டலத்திலும் முட்டை பண்ணைக் கொள்முதல் விலை வியாழக்கிழமை ஒரே நாளில் 20 காசுகள் குறைக்கப்பட்டு, ரூ.2.90ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால், முட்டை பண்ணைக் கொள்முதல் விலை மேலும் குறையக்கூடும் என்று நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தக் குழுவின் அலுவலர்கள் கூறியது:

தமிழகம் முழுவதும் கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. நாமக்கல்லிலும் கடந்த சில நாள்களாக 102 டிகிரி பாரன்ஹீட்டுக்கு அதிகமான வெப்பம் பதிவாகியுள்ளது. அதிகரித்து வரும் கோடை வெயில் காரணமாக, நாமக்கல் மண்டலத்தில் உற்பத்தியாகும் முட்டைகளுக்கான நுகர்வு 20 சதம் வரை குறைந்துள்ளது.

தவிர, பர்வலா, தில்லி, விஜயவாடா, ஹைதராபாத் உள்ளிட்ட மண்டலங்களில் முட்டைக் கொள்முதல் விலை பெருமளவில் குறைக்கப்பட்டுள்ளதால், நாமக்கல் மண்டலத்திலும் விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளது என்றனர்.

பிற மண்டலங்களில் நிலவும் முட்டை விலை: சென்னை -ரூ.3, பெங்களூர் -ரூ.2.60, மைசூர் -ரூ.2.80, ஹைதராபாத் -ரூ.2.37, மும்பை -ரூ.2.69, விஜயவாடா -ரூ.2.69, கொல்கத்தா -ரூ.2.70, பர்வாலா -ரூ.2.20, தில்லி -ரூ.2.40.

## குழித் தட்டு நாற்றங்காலுக்கு மாற விவசாயிகளுக்கு அழைப்பு

குழித் தட்டு நாற்றங்கால் முறையில் பயிர் சாகுபடியை மேற்கொள்வதன் மூலம் குறைந்த செலவில், கூடுதல் மகசூல் பெற முடியும் என வேளாண்மை துணை இயக்குநர் கி. வெங்கடேசன் தெரிவித்தார்.

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்துக்குள்பட்ட மிட்டாதின்னஹள்ளியில் வியாழக்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாவில் அவர் பேசியது:

வேளாண் பயிர் சாகுபடி முறையில் நவீன தொழில்நுட்பங்களை புகுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகிவிட்டது. இந்தச் சூழலில் விவசாயிகள் தங்களது தேவையற்ற செலவுகளைக் குறைக்கவும், கூடுதல் மகசூலைப் பெறவும் தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமானது.

காய்கறி, பழ வகைகளுக்கு மட்டுமல்லாது பெரும்பான்மையான பயிர்களுக்கு குழித் தட்டு நாற்றங்கால் முறை சிறந்தவையாக உள்ளது. குழித்தட்டு நாற்றாங்காலைத் தேர்வு செய்வதால் தரமான நாற்றுகளை உற்பத்தி செய்வதுடன், ஒரு ஹெக்டேருக்கு எவ்வளவு நாற்றுகள் தேவை என்பதை முன்கூட்டியே தீர்மானிக்கலாம். அதற்கேற்ப உரமிடலாம். இதன்மூலம் சாகுபடிச் செலவுகள் குறையும். கூடுதல் மகசூலும் கிடைக்கும் என்றார் அவர்.

விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசுகள் வழங்கும் மானியத் திட்டங்கள் குறித்து வேளாண்மை உதவி இயக்குநர் ஆர். அண்ணாதுரை விளக்கிக் கூறினார்.

மத்திய அரசின் கீழ் இயங்கும் மிகப்பெரிய கூட்டுறவு உர நிறுவனமான கிரிப்கோ நிறுவனத்தின் விற்பனை மேலாளர் கே.முத்துராமலிங்கம், அரசு வழங்கும் மானிய உதவிகள், உரச் செலவைக் கட்டுப்படுத்துதல் குறித்து விளக்கம் அளித்தார்.

மிட்டா தின்னஹள்ளி ஊராட்சி மன்றத் தலைவர் டி. மாதுலிங்கம், அதிமுக கவுன்சிலர் ராஜவேல், வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியை இந்துமதி, கால்நடை உதவி மருத்துவர் பொற்செல்வன், வேளாண்மை அலுவலர் மணிராஜன், தோட்டக்கலை அலுவலர் ஆசைத்தம்பி

மற்றும் பட்டு வளர்ச்சி, வேளாண்மைப் பொறியயல் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் அலுவலர்கள் பேசினர்.

தெருக்கூத்து நாடகங்கள் மூலமும் அரசின் திட்டங்கள் குறித்து பிரசாரம் செய்யப்பட்டது. தொடர்ந்து, விழாவில் பங்கேற்ற அனைத்து விவசாயிகளுக்கும் அறுசுவை விருந்து வழங்கப்பட்டது.

## இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்ட தாலுகா அலுவலகங்களில் வெள்ளிக்கிழமை தாலுகா அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர் தி.காசி தலைமையிலும், செய்யாறு வட்டாட்சியர் அலுவலகத்தில் கோட்டாட்சியர் ஜனனி சௌந்தர்யா தலைமையிலும் விவசாயிகள் குறைதீர் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

இதேபோல, மாவட்டத்தின் மற்ற தாலுகா அலுவலகங்களிலும் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு தாலுகா அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

இக் கூட்டங்களில் அந்தந்த தாலுகாவைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் விஜய் பிங்ளே கேட்டுக்கொண்டுள்ளார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 33.64 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை 33.64 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 152 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 800 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.56 டி.எம்.சி.

## தேனியில் கோடை மழை: பொதுமக்கள் மகிழ்ச்சி

தேனி, ஆண்டிபட்டி பகுதிகளில் வியாழக்கிழமை பிற்பகல் பெய்த கோடை மழையால், வெப்பம் தணிந்து பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

மாவட்டத்தில் தற்போது கோடை வெயில் சுட்டெரித்து வரும் நிலையில், ஆண்டிபட்டி, தேனி, சின்னமனூர் ஒன்றியப் பகுதிகளில் கடந்த சில நாள்களுக்கு முன், சூறைக் காற்றுடன் லேசான மழை பெய்து விவசாய பயிர்களுக்கு சேதம் ஏற்படுத்தியது.

கம்பம், கூடலூர் ஆகிய இடங்களில் புதன்கிழமை இரவு மழை பெய்தது.

தேனி, ஆண்டிபட்டி ஆகிய இடங்களில் வியாழக்கிழமை பிற்பகல் வானில் மேக மூட்டம் காணப்படாவிட்டாலும் திடீரென மழை கொட்டியது. கோடை மழையால் நகரம் இரவுபோல் ஆனதால் வாகனங்கள் விளக்கு வெளிச்சத்துடன் சென்றன. தேனியில், கடும் வறட்சி நிலவி வரும் நிலையில், பகலில் மழை பெய்ததால் வீடுகளில் பெண்கள் மழை நீரை தொட்டிகளில் பிடித்து சேமித்தனர். ஒரு மணி நேரம் வரை நீடித்த மழையால் கோடை வெப்பம் தணிந்து பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

## வேளாண்மை மேம்பாட்டுத் திட்ட பணிகள்: ஆட்சியர் ஆய்வு

சின்னமனூர் பகுதியில் வேளாண்மை மற்றும் தோட்டக் கலை துறைகள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுத் திட்டப் பணிகளை வியாழக்கிழமை மாவட்ட ஆட்சியர் கே.எஸ்.பழனிசாமி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சின்னமனூரில் செயல்பட்டு வரும் வாழை பழுக்க வைக்கும் கூடம், பள்ளிக் கோட்டை பகுதியில் தொகுப்பு பண்ணை திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்டுள்ள தோட்டப் பயிர்கள், முத்துலாபுரத்தில் நுண்ணீர் பாசனத் திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யப்பட்டுள்ள எண்ணெய் பனைத் தோட்டம், கரும்பு வயல், மண்புழு உரம் தயாரிப்பு கூடம், பந்தல் காய்கனிப் பயிர்கள் ஆகியவற்றை ஆட்சியர் பார்வையிட்டார்.

ஆய்வின் போது விவசாயிகளிடம் ஆட்சியர் கூறியது: வாழை பழுக்கும் கூடத்தின் பயன்பாடு குறித்து விவசாயிகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும். தொகுப்பு பண்ணைத் திட்டத்தின் கீழ் 50 ஏக்கர் பரப்பளவில் உள்ள சிறு விவசாயிகள் ஒருங்கிணைந்து பயிர் சாகுபடி செய்து குறைந்த செலவில் அதிக லாபம் பெறலாம் என்றார்.

மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சுந்தரம், ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) செ.முத்தையா, வேளாண்மை வணிக துணை இயக்குநர் ரங்கநாதன், வேளாண்மை துணை இயக்குநர் ராதாகிருஷ்ணன், வேளாண்மை விற்பனைக் குழு செயலர் முருகன், தோட்டக்கலை உதவி இயக்குநர் சுரேஷ்ஸ்ரீராம் ஆகியோர் உடனிருந்தனர்.

## விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் ரூ. 60 கோடி

திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 1.28 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.60 கோடி வறட்சி நிவாரணம் வழங்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சியர் ந. வெங்கடாசலம் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத் தொகை வழங்குவது தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் கே. மனோகரன் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்துக்கு ஆட்சியர் ந. வெங்கடாசலம் தலைமை வகித்தார். கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களிடம் ஆட்சியர் தெரிவித்தது:

திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சி பாதித்த பகுதிகளை தமிழக நிதி அமைச்சர் ஓ. பன்னீர் செல்வம் தலைமையிலான அமைச்சர்கள் குழு மார்ச் 16 ஆம் தேதி பார்வையிட்டுச் சென்றது. அதன்பின்னர் முதல்வரிடம் குழு அளித்த தகவலின்படி, 50 சதவீதத்துக்கும் மேல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணமாக ரூ. 60 கோடியே 11ஆயிரத்து 415 வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் நெல் பயிரிட்டு பாதிப்படைந்த 9,919 ஏக்கர் பரப்பளவுக்கு தலா ரூ. 5,000 வீதம் ரூ. 4.97 கோடியும், பிற பயிர்கள் (காய்கறி, பருத்தி, சிறுதானியம், மக்காச்சோளம், பயறு, எண்ணெய்வித்து, கரும்பு) சாகுபடி செய்து பாதிப்படைந்த 1.47 ஏக்கருக்கு தலா ரூ. 4,000 வீதம் ரூ. 44.69 கோடியும், காப்பி பயிரினால் பாதிப்படைந்த 25,873.25 ஏக்கர் பரப்பளவிற்கு தலா ரூ. 4,000 வீதம் ரூ. 10.35 கோடியும் நிவாரண தொகையாக வழங்கப்பட உள்ளது.

இதன்மூலம் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த 1.28 லட்சம் விவசாயிகள் பயன் பெறுவர். நிவாரணத் தொகை முறையாக விவசாயிகளுக்கு சென்றடையும் வகையில், அவர்களுடைய வங்கிக் கணக்குகளில் செலுத்தப்படும். இதுவரை வங்கிக் கணக்கு இல்லாதவர்களுக்கு உடனடியாக வங்கிக் கணக்குத் தொடங்கப்பட்டு நிவாரணம் வழங்கப்படும்.

நிவாரணத் தொகை வழங்குவது தொடர்பாக, அந்தந்த கிராம நிர்வாக அலுவலகம், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் அலுவலகம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி உள்ளிட்ட இடங்களில் தகவல் பலகை மூலம் அறிவிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் எம். பாண்டியராஜன், வேளாண்மை இணை இயக்குநர் நா.த. சம்பத்குமார், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் த. சந்திரசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திண்டுக்கல்லில் இடி மின்னலுடன் பலத்த மழை

திண்டுக்கல் நகரில் வியாழக்கிழமை மாலை இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

திண்டுக்கல் நகர் மற்றும் புறநகர் பகுதியில் மாலை 6 மணிக்கு தொடங்கிய இந்த மழை, சுமார் ஒரு மணி நேரம் பெய்தது. இதனால், தெருக்களில் மழை நீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது. இந்த மழையால், மாலை வரை நிலவிய வெப்பம் தணிந்து குளிர்ந்த சீதோஷ்ண நிலை நிலவியது.

மழை பெய்தபோது, சில இடங்களில் ஆலங்கட்டிகளும் விழுந்ததாகக் கூறப்படுகிறது. மழையுடன் காற்றும் சேர்ந்து வீசியதால், குடை பிடித்து சென்றவர்களும் நனைந்தனர். அதன் பின்னர், இரவு 8.30 வரையிலும் தூரல் விழுந்து கொண்டே இருந்தது.

## உழவர் பெருவிழா

விக்கிரவாண்டி வட்டாரம், தொரவி கிராமத்தில் உழவர் பெருவிழா கொண்டாடப்பட்டது.

விக்கிரவாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் ராமசாமி வரவேற்றார். ஊராட்சித் தலைவர் நாகேஸ்வரி முன்னிலை வகித்தார். விழாவில் விக்கிரவாண்டி வேளாண்மை அலுவலர் ரா.ஜோதிமணி திருந்திய நெல்சாகுபடி மற்றும் செம்மை கரும்பு சாகுபடி குறித்து எடுத்து கூறினார். இதேபோல் கஸ்பாகரனை கிராமத்திலும் உழவர் பெருவிழா நடைபெற்றது. ஊராட்சித் தலைவர் எம்.சுவாமிமலை, விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கான மின் கட்டணம் மாற்றியமைப்பு: சென்னையில் இன்று கருத்து கேட்பு

விவசாய மின் இணைப்பு மற்றும் குடிசைப் பிரிவினருக்கான மின் கட்டணத்தை மாற்றியமைப்பது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் சென்னையில் இன்று நடத்தப்படுகிறது.

இதுகுறித்து தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:விவசாய மற்றும் குடிசைப் பிரிவினருக்கான மின் கட்டணத்தை மாற்றியமைப்பதற்கான பரிந்துரையை மின் வாரியம், ஒழுங்குமுறை ஆணையத்திடம் சமர்ப்பித்துள்ளது.

இந்தக் கட்டணத்தை மாற்றியமைப்பதால் ஏற்படும் உயர்வு முழுவதையும் தமிழக அரசே மானியமாக வழங்கிவிடும் என்றபோதும், பொதுமக்கள் மற்றும் பிற தரப்பினரிடையே கருத்துக்கள் கேட்கப்பட்டு வருகின்றன.

இதுவரை 11 கருத்துரைகள் பெறப்பட்டுள்ளன. அடுத்தகட்டமாக சென்னையில் இன்றும், திருச்சியில் மே 10-ஆம் தேதியும், மதுரையில் மே 17-ஆம் தேதியும் நடத்தப்பட உள்ளன.

சென்னையில் எஸ்பிளனேட்டில் அமைந்துள்ள தமிழிசை சங்கக் கட்டடத்தில் கருத்து கேட்பு கூட்டம் நடைபெற உள்ளது. இதில் பங்கேற்று கருத்துகளைத் தெரிவிக்க விரும்புபவர்கள், காலை 9 மணி முதல் 10.30 மணி வரை பெயர்களை முன்பதிவு செய்துகொள்ள வேண்டும்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

3.04.2013 A.M

## திண்டுக்கல் மாவட்டத்திற்கு வறட்சிநிதியாக விவசாயிகளுக்கு ஒதுக்கீடு ரூ.60 கோடி நெற்பயிர்கள் பாதிப்பிற்கு ஏக்கருக்கு ரூ.5000 வழங்க முடிவு

திண்டுக்கல்:திண்டுக்கல் மாவட்டத்தில் 50 சதவீதத்திற்கு மேல் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க மாநில அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக முதற்கட்டமாக ரூ.60 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை அடுத்தடுத்து பொய்த்ததால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது.இதையடுத்து மாவட்ட வாரியாக, அமைச்சர்களை கொண்ட குழு வறட்சிபாதித்த பகுதிகளை பார்வையிட்டது. இதற்கிடையில் வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மூலம் வறட்சி பாதித்த பகுதிகள் வருவாய் கிராமம் வாரியாக கணக்கெடுக்கப்பட்டது.இதில் 50 சதவீத பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க முடிவு செய்து நிவாரண தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.முதற்கட்டமாக மாவட்டத்திற்கு விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணநிதி வழங்க ரூ. 60 கோடியை ஒதுக்கியுள்ளது.நெற்பயிர் பயிரிட்டு அறுவடை செய்ய முடியாமல் பாதிக்கப்பட்ட விசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 5 ஆயிரம் வீதம் நிதி வழக்கப்படவுள்ளது. நெற்பயிர் பயிரிட்ட விவசாயிகளுக்கு மொத்தம் ரூ. 4 கோடியே 95 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதர பயிர்கள் பயிரிட்டு 50 சதவீதம் பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு ரூ.44 கோடியே 69 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.இந்நிதியில் இறவை பாசன விவசாயிகளுக்கு ரூ.4000 மற்றும் இதரவிவசாயிகளுக்கு ரூ.3000 வழங்கப்படவுள்ளது.தென்னை மரங்கள் காய்ந்து பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரணமாக மொத்தம் ரூ.10 கோடியே 34 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.கலெக்டர் வெங்கடாசலம் கூறியதாவது:தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நிவாரண தொகை, விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. வங்கியில் கணக்கு துவக்கியிருந்தால் நிவாரண தொகை அவரவர் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படவுள்ளது. வங்கி கணக்கு இல்லாத விவசாயிகளுக்கு தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் வழங்கப்படவுள்ளது," என்றார்.

## பாசனத்துக்கு உயிர் நீர் திறப்பு என்பது வெறும்...தடப்பள்ளி, அரக்கன்கோட்டை விவசாயிகள் குமுறல்

கோபிசெட்டிபாளையம்: தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் கண் துடைப்புக்காக உயிர் நீர் திறக்கப்பட்டுள்ளதாக பாசன விவசாயிகள் சங்கத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

கொடிவேரி அணையின் பாசனங்களான தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனம் மூலம், 24 ஆயிரத்து, 508 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், 15ல் தண்ணீர் திறக்கப்படும். பாசனத்தில் மட்டுமே இரண்டு போகத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டன. சென்ற இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால், கடந்தாண்டு ஒரு போகத்துக்கு மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டது. இரண்டாம் போகத்துக்கு தண்ணீர் திறக்கவில்லை.

இதற்கிடையில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு, 4.5 டி.எம்.சி., தண்ணீர் ஜூன் மாதத்தில் இருந்து திறக்கப்படும், என காவிரி நடுவர் மன்றம் தெரிவித்துள்ளது. இதை கண்டித்து கோபியில் பிரமாண்டமான பேரணி நடத்தப்பட்டது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்காலில், 12 நாட்களுக்கு உயிர் நீர் திறக்கப்பட்டுள்ளது. விவசாயிகளை சமாதானப்படுத்த, கண் துடைப்புக்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாக, விவசாய சங்கத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் சங்க தலைவர் தளபதி, செயலாளர் ராஜா ஆகியோர் கூறியதாவது:

தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், 15 முதல் ஃபிப்ரவரி, 15 வரை, 10 மாதத்துக்கு நீர் திறப்பதை, பொதுப்பணி துறையினர் இதுவரை கடைபிடித்த நடைமுறையாகும். கடந்தாண்டு வாய்க்கால் மராமத்து காரணமாக மே, 5ல் தண்ணீர் திறக்கப்பட்டது. அணையில் நீர் குறைவாக இருந்ததால், செப்.,15ம் தேதி வரை முறை வைத்து, 115 நாட்களுக்கு நீர் கொடுக்கப்பட்டது. அதன்பின், இன்றைய தேதி வரை எட்டு மாதமாக தண்ணீர் திறக்கவில்லை.

இந்நிலையில் கடந்தாண்டு, 10 மாதம் தொடர்ந்து வழக்கம் போல் பாசனத்துக்கு நீர் வரும் என்ற எண்ணத்தில் பயிரிடப்பட்ட கரும்பு, வாழை, மஞ்சள் சாகுபடிக்காக, நடப்பாண்டு ஃபிப்ரவரி, 15ம் தேதிக்குள் இடை தண்ணீர் வேண்டும் என முறையிட்டோம். பயிர் கருகி நிற்கின்றபோது நீரை வழங்காமல், புதிய போகம் ஆரம்பித்த பின் உயிர் தண்ணீர் என்ற பெயரில் நீர் வழங்கப்பட்டுள்ளது. பாசன பகுதிகளில், 90 சதவீத நிலங்கள் பயிரிடப்படாமல் தரிசாக உள்ளது.

அரசு அறிவித்த வறட்சி நிவாரண பட்டியலில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன நிலங்களை இணைக்க வேண்டியதில்லை, என மாவட்ட வேளாண்மை துறை அறிக்கை தாக்கல் செய்துள்ளது. 90 சதவிகித்துக்கு மேற்பட்ட நிலங்கள் வாய்க்கால் நீரையே நம்பியும், கிணறுகளோ, மும்முனை மின்சார இணைப்பும் இல்லாத சூழலில் இந்நிலங்களுக்கு இந்நீரினால் எந்தவித பயனும் இல்லை. எங்களின் உரிமை போராட்டத்தை தடுக்கும் நோக்குடனும், இவர்களுக்கும் நீர் கொடுத்தோம் என்ற கண் துடைப்புக்காக உயிர் நீர் திறக்கப்பட்டுள்ளது. எங்களுக்கு தேவை உரிமையுள்ள, 10 மாத பயிர் நீரே தவிர, தேவையில்லாத, 10 நாள் உயிர் நீர் அல்ல, என தெரிவித்தனர்.

## மக்கர்! கம்ப்யூட்டர் சிட்டா வழங்கும் இயந்திரம்... நாமக்கல் விவசாயிகள் பெரும் அவதி

நாமக்கல்: நாமக்கல் தாலுகா அலுவலகத்தில் உள்ள கம்ப்யூட்டர் சிட்டா வழங்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளது. அதனால், பல்வேறு கிராமங்களில் இருந்து, நாள்தோறும் தாலுகா அலுவலகம் வரும் விவசாயிகள், சிட்டா அடங்கல் பெற முடியாமல், பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

நாமக்கல் தாலுகா அலுவலக வளாகத்தில், நில அளவையர் பிரிவு உள்ளது. அங்கு, விவசாய நிலம் உள்ளிட்டவற்கு கம்ப்யூட்டர் சிட்டா வழங்கப்படுகிறது. நிலத்தின் சர்வே எண் தெரிவிப்பதுடன், 20 ரூபாய் கட்டணம் செலுத்தினால், கம்ப்யூட்டர் சிட்டா வழங்கப்படும்.

தற்போது, வறட்சியால் பாதிக்கப்பட்ட விளை நிலங்களுக்கு, அரசு நிவாரணத் தொகை வழங்க உள்ளது. வறட்சி நிவாரணத் தொகை பெறுவதற்கு, கம்ப்யூட்டர் சிட்டா அவசியம். எனவே, நாமக்கல் தாலுகாவுக்கு உட்பட்ட விவசாயிகள், சில வாரங்களாக கம்ப்யூட்டர் சிட்டா கேட்டு, நாமக்கல் தாலுகா அலுவலகத்தில், குவிந்து வருகின்றனர்.

எனினும், சிட்டா வழங்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால், விவசாயிகளுக்கு கம்ப்யூட்டர் சிட்டா வழங்க முடியாத சூழல் உருவாகியுள்ளது. அதனால், நாமக்கல் தாலுகாவின் பல பகுதியில் இருந்து வரும் விவசாயிகள், சிட்டா அடங்கல் பெற முடியாமல், பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது:

வறட்சி பாதித்த விளை நிலங்கள் கணக்கிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விளை நிலங்களுக்கு, அதன் பாதிப்புக்கு தகுந்தாற்போல், இழப்பீடு வழங்கப்பட உள்ளது. அதற்கு, கம்ப்யூட்டர் சிட்டா வழங்க வேண்டும். எனினும், தாலுகா அலுவலகத்தில், கம்ப்யூட்டர் சிட்டா வழங்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால், சில நாட்களாக சிட்டா பெற முடியாமல், வீணாக வந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது.

நாமக்கல் தாலுகா முழுவதுக்கும், இங்கு தான் பட்டா வழங்கப்படுகிறது என்பதால், நாள்தோறும் ஏராளமான விவசாயிகள் வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை உள்ளது.
இவ்வாறு அவர்கள் கூறினர்.
நில அளவையர் பிரிவு அலுவலர்கள் கூறியதாவது:
ஆன்-லைன் முறையில் கம்ப்யூட்டர் சிட்டா வழங்கப்படுகிறது. நாமக்கல் தாலுகாவில் உள்ள, 120 கிராம மக்களும், இங்கு வந்து சிட்டா பெற வேண்டும். பட்டா எண் மற்றும், 20 ரூபாய் கட்டணம் செலுத்தினால், உடனடியாக சிட்டா வழங்கப்படும்.
சில தினங்களாக, ஆன்-லைனில் ஏற்படும் பிரச்னை காரணமாக, விரைந்து சிட்டா வழங்க முடியவில்லை. விவசாயிகளுக்கு இப்பிரச்னை பற்றி தெரிவிக்கப்படுகிறது. ஆன்-லைனில் ஏற்பட்ட பழுது, விரைந்து சரி செய்யப்படும். பின்னர், உடனடியாக அனைவருக்கும் வழங்கப்படும். கூடுதல் சிட்டா வேண்டுமெனில், 80 ரூபாய் செலுத்த வேண்டும்.
இவ்வாறு அவர்கள் கூறினர்.

## இளநீரால் கொப்பரைக்கு தட்டுப்பாடு



கொச்சி:கேரளா மற்றும் தமிழகத்தில் கடும் கோடை நிலவி வருகிறது. இதையடுத்து, இளநீருக்கான தேவை மற்றும் பயன்பாடு மிகவும் அதிகரித்துள்ளது. இதனால், தேங்காய் மற்றும் கொப்பரைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக, கொச்சி எண்ணெய் வர்த்தகர்கள் சங்கத்தின் துணைத் தலைவர் தெரிவித்தார்.
இளநீருக்கான தேவை அதிகரித்ததையடுத்து, கொப்பரைக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கேரளாவில், ஒரு குவிண்டால் கொப்பரையின் விலை, 4,600 ரூபாய் என்ற அளவிலும், தமிழகத்தில் இதன் விலை, 4,500 ரூபாய் என்ற அளவிலும், அதிக மாற்றமின்றி நிலையாக உள்ளது.
இதே போன்று, கேரளாவில், ஒரு கிலோ தேங்காய் எண்ணெய் விலை, 63 ரூபாய் என்ற அளவிலும், தமிழகத்தில், இதன் விலை, 60 ரூபாய் என்ற அளவிலும் உள்ளது.பாமாயில் எண்ணெய் மற்றும் பனை கொட்டையிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் போன்றவற்றின் விலை

மிகவும் குறைவாக இருப்பதால், தேங்காய் எண்ணெயின் விலை உயராமல் நிலையாக உள்ளது என, இத்துறையைச் சேர்ந்த வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

## முட்டை விலை ரூ.2.90 ஆக குறைப்

நாமக்கல்:தமிழகம் மற்றும் கேரளாவில், முட்டை விலை, 290 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.நாமக்கல்லில் நடைபெற்ற, தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், 310 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த முட்டை விலை, 20 காசுகள் குறைக்கப்பட்டு, 290 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 300; பெங்களூரு, 260; மைசூரு, 280; ஐதராபாத், 237; மும்பை, 269; விஜயவாடா, 242; கோல்கட்டா, 270; பார்வாலா, 220; டில்லி, 240. இவ்வாறு, நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

பண்ணையாளர் மற்றும் வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 55 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக் கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை, கிலோ, 70 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

## திண்டுக்கல் மாவட்டத்திற்கு வறட்சிநிதியாக விவசாயிகளுக்கு ஒதுக்கீடு ரூ.60 கோடி நெற்பயிர்கள் பாதிப்பிற்கு ஏக்கருக்கு ரூ.5000 வழங்க முடிவு

திண்டுக்கல்:திண்டுக்கல் மாவட்டத்தில் 50 சதவீதத்திற்கு மேல் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க மாநில அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக முதற்கட்டமாக ரூ.60 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை அடுத்தடுத்து பொய்த்ததால் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டது.இதையடுத்து மாவட்ட வாரியாக, அமைச்சர்களை கொண்ட குழு வறட்சிபாதித்த பகுதிகளை பார்வையிட்டது. இதற்கிடையில் வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை மூலம் வறட்சி பாதித்த பகுதிகள் வருவாய் கிராமம் வாரியாக கணக்கெடுக்கப்பட்டது.இதில் 50 சதவீத பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க முடிவு செய்து நிவாரண தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.முதற்கட்டமாக மாவட்டத்திற்கு விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணநிதி வழங்க ரூ. 60 கோடியை ஒதுக்கியுள்ளது.நெற்பயிர் பயிரிட்டு அறுவடை செய்ய முடியாமல் பாதிக்கப்பட்ட விசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 5 ஆயிரம் வீதம் நிதி வழக்கப்படவுள்ளது. நெற்பயிர் பயிரிட்ட விவசாயிகளுக்கு மொத்தம் ரூ. 4 கோடியே 95 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதர பயிர்கள் பயிரிட்டு 50 சதவீதம் பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு ரூ.44 கோடியே 69 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.இந்நிதியில் இறவை பாசன விவசாயிகளுக்கு ரூ.4000 மற்றும் இதரவிவசாயிகளுக்கு ரூ.3000 வழங்கப்படவுள்ளது.தென்னை மரங்கள் காய்ந்து பாதிப்புக்குள்ளான விவசாயிகளுக்கு நிவாரணமாக மொத்தம் ரூ.10 கோடியே 34 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.கலெக்டர் வெங்கடாசலம் கூறியதாவது:தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் நிவாரண தொகை, விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. வங்கியில் கணக்கு துவக்கியிருந்தால் நிவாரண தொகை அவரவர் வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்படவுள்ளது. வங்கி கணக்கு இல்லாத விவசாயிகளுக்கு தொடக்கவேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் வழங்கப்படவுள்ளது," என்றார்.

## வாழையில் வாடல் நோய் கட்டுப்படுத்த வழிமுறை

பெரியகுளம்:வெயில் காலத்தில் வாழையில் "பனாமா' வாடல் நோயை கட்டுப்படுத்த தோட்டக்கலைக் கல்லூரி நிர்வாகம் ஆலோசனை வழங்கியுள்ளது.பெரியகுளம் மற்றும் ஒன்றியப் பகுதியில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் வாழை பயிர் செய்யப்பட்டுள்ளது.வெயில் காலங்களில் வாழையில் பனாமா வாடல் நோய் தாக்கத்தால் விளைச்சல் பாதிக்கப்படுகிறது.அமிலத்தன்மை அதிகமாக உள்ள மண்ணில் இந்த பூஞ்சாணம் அதிகமாகக் காணப்படும்.இந்நோய் தாக்கப்பட்டால் முதலில் அடிப்பக்க இலைகளின் ஓரங்கள் மஞ்சள் நிறமாக மாறி காம்பிலிருந்து ஒடிந்து விடும்.இந்த பூஞ்சாணம் சைலம் திசுக்களில் உள்ள சத்துக்களை உறிஞ்சுகிறது. இதனால் வேரிலிருந்து மற்ற பகுதிகளுக்கு செல்லும் நீர் மற்றும் சத்துக்கள் தடை செய்யப்பட்டு,வாழை வாடத் துவங்குகிறது.நோய் தாக்கிய வாழைக் கிழங்குகளை புதிய இடத்தில் நடுவதாலும், நோய் தாக்காத வாழையின் வேர்களை நோயுள்ள வாழையின் வேர்கள் தொடுவதாலும் இந்நோய் பரவுகிறது. நோய் தாக்கிய வாழையை கண்டறிந்து அதை வேருடன் பிடுங்கி எரித்து விட்டு அந்த குழிகளில் சுண்ணாம்பு இட வேண்டும். மண்ணின் அமிலத்தன்மையை, சுண்ணாம்பு இட்டு சரி செய்வதன் மூலம் வாடல் நோய் வரமால் தடுக்கலாம். வாழையின் உற்பத்தியை அதிகரிக்கலாம், என தோட்டக்கலைக் கல்லூரி நிர்வாகம் ஆலோசனை வழங்கியுள்ளது.

## தேனியில் மழை

தேனி:தேனியில், கோடை வெயில் கடந்த ஒரு வாரமாக வாட்டி வதைக்கி வருகிறது. கடந்த 4 நாட்களாக நாள்தோறும், வானம் மேகமூட்டத்துடன், மப்பும் மந்தாரமுமாக காணப்பட்டு, மழை பெய்வது போல் இருக்கும். ஆனால் மழை பெய்யாது. இந்நிலையில், நேற்று தேனியில் மதியம்

வரை கடும் வெயில் இருந்தது. திடீரென பிற்பகல் 4.30 மணிக்கு இடி மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது. தேனி-கம்பம் ரோட்டில் மழைநீர் சீராக செல்ல, போதுமான வடிகால் வசதி இல்லாததினால், மழைநீர் மற்றும் சாக்கடை கழிவுநீரும் சேர்ந்து குளம்போல் தேங்கியிருந்தது.இதனால் வாகன ஓட்டிகள் சிரமத்துடன் இப் பகுதியை கடந்து சென்றனர். பெரியகுளத்தில் நேற்று இரவு முதல் இடிமின்னலுடன் பலத்த மழை பெய்தது.

## கொளுத்தும் கோடை வெப்பம்: இளநீரின் பயன்பாடு அதிகரிப்பு

புதுக்கடை:கடும் கோடை வெப்பத்தைத் தணிக்க, இளநீரின் பயன்பாடு தினமும் அதிகரித்து வருவதால், குமரியில் இளநீருக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது.

குமரி மாவட்டத்தில் கடுமையான கோடை வெயில் கொளுத்தி வருகிறது. இதில், தணியாத தண்ணீர் தாகம் வேறு, மக்களை வாட்டி வதைக்கிறது. தாகத்தைத் தீர்க்க வெளியில் குடிநீர் பருகலாம் என நினைத்தால், சுகாதாரமற்ற குடிநீர் கிடைக்கும் ‹ழ்நிலை தான் உள்ளது. இந்த சுகாதாரமற்ற குடிநீரை பருகுவதால் வயிற்றுப்போக்கு உட்பட பல தொற்று நோய்கள் ஏற்படுகின்றன.

தண்ணீர் சுகாதாரமற்று வருவதால், பாட்டில் குளிர்பானங்களை வாங்கிப் பருகலாம் என்றால், விலையோ அதிகம். மேலும், இவ்வகை குளிர்பானங்களும் முழுமையான வகையில் சுகாதாரத்துடன் இருக்குமா என்ற ஐயம் ஏற்பட்டுள்ளது. மேலும், இவை உடல் நலத்திற்கு பெரும் தீங்கு செய்பவை என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. எனவே, அவற்றையும் பெரும்பாலானோர் தவிர்த்து வருகின்றனர்.

இன்றைய ‹ழலில் டவுன் பகுதிகளில் எங்கு பார்த்தாலும் பாக்கெட் வாட்டர் விற்பனை ஜோராக நடக்கிறது. பாக்கெட்டுகளில் ஐ.எஸ்.ஐ., போன்ற தர முத்திரைகள் அச்சிடப்பட்டிருந்தாலும், அவற்றின் நிஜத்தன்மை கேள்விக்குறியாகவே உள்ளது. சுகாதாரத்துடன் தாகம் தணிக்க, அதேவேளை உடல் நலத்தைப் பாதுகாக்க வேண்டும் என விரும்புவோர்களுக்கு இளநீர் ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்துள்ளது.

இயற்கை அன்னையின் கொடையாக இளநீர் உள்ளது. கொளுத்தும் கோடையை அடுத்து நாளுக்கு நாள் இளநீரின் மவுசு அதிகரித்துக் கொண்டே செல்கிறது. சுமார் 10 ஆண்டுகளுக்கு முன் திருநெல்வேலி, மதுரை, சென்னை, கோவை, திருச்சி போன்ற வெளி மாவட்டங்களில், அதுவும் குறிப்பாக பஸ் ஸ்டாண்டுகள், பெரிய ஜங்ஷன்கள், மார்க்கெட்டுகளில் மட்டுமே இளநீர் விற்பனை நடந்து வந்தது.

குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரை கன்னியாகுமரி, நாகர்கோவில், மார்த்தாண்டம் என முக்கிய நகரங்களில் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வந்த இளநீர், இன்று மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும், ரோட்டோரங்களிலும் விற்கப்படுகிறது. மாவட்டத்தில் கல்லுவிளை, வில்லுக்குறி, சுங்கான்கடை, பார்வதிபுரம் பகுதிகளில் இளநீர் விற்பனைக்கு என்று தனிக்கடைகளும் உள்ளன. இளநீர் உடலுக்கு சக்தியை தரக்கூடியது. மேலும், உடல் வெப்பத்தை தணிப்பதற்கும், உடல் குளிர்ச்சிக்கும் உகந்தது. இதனால், இளநீரை பொதுமக்கள் அதிக அளவில் விரும்பி பருகுவதால், விற்பனையும் அதிக அளவில் நடந்து வருகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன் தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களிலும் சிக்குன் குனியா நோய் அதிகம் பரவத்துவங்கியது.

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்களின் கை, கால்கள் மற்றும் மூட்டுகளில் வலி ஏற்பட்டு, நடப்பதற்கு கூட இயலாமல் பல மாதங்கள் அவதிப்பட்டனர். மூட்டுகளில் ஏற்பட்ட வலியை, இளநீர் குடிப்பதன் மூலம் கட்டுப்படுத்த இயலும் என்று பொதுமக்கள் மத்தியில் பேசப்பட்டது. இதைத்தொடர்ந்து, குமரி மாவட்டத்தில் இளநீர் பருகுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிக்கத் துவங்கியது.

இதனால், புதுசு புதுசாக ஆங்காங்கே இளநீர் கடைகளும் முளைக்கத் துவங்கின. மேலும், கோடை சீசன்களில் தோட்டங்களில் இளநீர் உற்பத்தியும் குறைந்து காணப்படும். இதனால், தேவைக்கும் குறைவாகவே இளநீர் கிடைத்து வருகிறது. ஒரு இளநீர் தற்போது 25 முதல் 30 ரூபாய் வரை விற்கப்படுகிறது.

இதனால், விவசாயிகள் தங்கள் தோட்டங்களில் இருந்து இளநீராகவே அதிக அளவில் விற்பனை செய்கின்றனர். இதனால், வருங்காலங்களில் தேங்காய்களின் விலை அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்படலாம். மேலும், தேங்காய்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் ‹ழலும் ஏற்படலாம்.

## பாசனத்துக்கு உயிர் நீர் திறப்பு என்பது வெறும்...தடப்பள்ளி, அரக்கன்கோட்டை விவசாயிகள் குமுறல்

கோபிசெட்டிபாளையம்: தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் கண் துடைப்புக்காக உயிர் நீர் திறக்கப்பட்டுள்ளதாக பாசன விவசாயிகள் சங்கத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர். கொடிவேரி அணையின் பாசனங்களான தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனம் மூலம், 24 ஆயிரத்து, 508 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், 15ல் தண்ணீர் திறக்கப்படும். பாசனத்தில் மட்டுமே இரண்டு போகத்தில் நெல் சாகுபடி செய்யப்பட்டன. சென்ற இரண்டு ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததால், கடந்தாண்டு ஒரு போகத்துக்கு மட்டுமே தண்ணீர் திறக்கப்பட்டது. இரண்டாம் போகத்துக்கு தண்ணீர்

திறக்கவில்லை.
இதற்கிடையில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு, 4.5 டி.எம்.சி., தண்ணீர் ஜூன் மாதத்தில் இருந்து திறக்கப்படும், என காவிரி நடுவர் மன்றம் தெரிவித்துள்ளது. இதை கண்டித்து கோபியில் பிரமாண்டமான பேரணி நடத்தப்பட்டது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்காலில், 12 நாட்களுக்கு உயிர் நீர் திறக்கப்பட்டுள்ளது. விவசாயிகளை சமாதானப்படுத்த, கண் துடைப்புக்காக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாக, விவசாய சங்கத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர்.
தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் சங்க தலைவர் தளபதி, செயலாளர் ராஜா ஆகியோர் கூறியதாவது:
தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்துக்கு ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், 15 முதல் ஃபிப்ரவரி, 15 வரை, 10 மாதத்துக்கு நீர் திறப்பதை, பொதுப்பணி துறையினர் இதுவரை கடைபிடித்த நடைமுறையாகும். கடந்தாண்டு வாய்க்கால் மராமத்து காரணமாக மே, 5ல் தண்ணீர் திறக்கப்பட்டது. அணையில் நீர் குறைவாக இருந்ததால், செப்.,15ம் தேதி வரை முறை வைத்து, 115 நாட்களுக்கு நீர் கொடுக்கப்பட்டது. அதன்பின், இன்றைய தேதி வரை எட்டு மாதமாக தண்ணீர் திறக்கவில்லை.
இந்நிலையில் கடந்தாண்டு, 10 மாதம் தொடர்ந்து வழக்கம் போல் பாசனத்துக்கு நீர் வரும் என்ற எண்ணத்தில் பயிரிடப்பட்ட கரும்பு, வாழை, மஞ்சள் சாகுபடிக்காக, நடப்பாண்டு ஃபிப்ரவரி, 15ம் தேதிக்குள் இடை தண்ணீர் வேண்டும் என முறையிட்டோம். பயிர் கருகி நிற்கின்றபோது நீரை வழங்காமல், புதிய போகம் ஆரம்பித்த பின் உயிர் தண்ணீர் என்ற பெயரில் நீர் வழங்கப்பட்டுள்ளது. பாசன பகுதிகளில், 90 சதவீத நிலங்கள் பயிரிடப்படாமல் தரிசாக உள்ளது. அரசு அறிவித்த வறட்சி நிவாரண பட்டியலில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசன நிலங்களை இணைக்க வேண்டியதில்லை, என மாவட்ட வேளாண்மை துறை அறிக்கை தாக்கல் செய்துள்ளது. 90 சதவிகித்துக்கு மேற்பட்ட நிலங்கள் வாய்க்கால் நீரையே நம்பியும், கிணறுகளோ, மும்முனை மின்சார இணைப்பும் இல்லாத சூழலில் இந்நிலங்களுக்கு இந்நீரினால் எந்தவித பயனும் இல்லை. எங்களின் உரிமை போராட்டத்தை தடுக்கும் நோக்குடனும், இவர்களுக்கும் நீர் கொடுத்தோம் என்ற கண் துடைப்புக்காக உயிர் நீர் திறக்கப்பட்டுள்ளது. எங்களுக்கு தேவை உரிமையுள்ள, 10 மாத பயிர் நீரே தவிர, தேவையில்லாத, 10 நாள் உயிர் நீர் அல்ல, என தெரிவித்தனர்.

## தேயிலை விலை ரூ. 2 சரிவு

குன்னூர்:தேயிலை வர்த்தகர்கள் ஏலத்தில் தேயிலைக்கு 2 ரூபாய் விலை சரிவு ஏற்பட்டது. குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் 17வது ஏலத்துக்கு மொத்தம் 13.44 லட்சம் கிலோ தேயிலை விற்பனைக்கு தயாராக உள்ளது. இதில், இலை ரகம் 9.74 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.70 லட்சம் கிலோவும் அடங்கும். மொத்தம் 69 சதவீத தூள் விற்பனையானது. அனைத்து

ரகங்களுக்கும் விலையில் ரூ. 2 சரிவு காணப்பட்டது.இலை ரகத்தில் சராசரி விலை 80-85 ரூபாயும், உயர் ரகத்துக்கு 115-150 ரூபாய் விலை கிடைத்தது. டஸ்ட் ரகத்தின் சராசரி விலை 85 ரூபாய் முதல் 88 ரூபாய் வரையிலும், உயர் ரகத்துக்கு 130 ரூபாய் முதல் 160 ரூபாய் வரை விலை கிடைத்தது. சி.டி.சி,, ரகத்துக்கு அதிகபட்சமாக 176 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு அதிகபட்சமாக 250 ரூபாய் விலை கிடைத்தது. 19வது ஏலத்துக்கு மொத்தம் 13.70 லட்சம் கிலோ விற்பனைக்கு தயாராக உள்ளது விலையில் தொடர்ந்து சரிவு ஏற்பட்டு வருவது உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகளை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

## மவுசு குறையாத லாலாப்பேட்டை வெற்றிலை தண்ணீர் இல்லாததால் சாகுபடி பாதிப்பு

லாலாப்பேட்டை: கிருஷ்ணராயபுரம் சுற்று வட்டார பகுதிகளில், வாய்க்காலில் தண்ணீர் வராததால் வெற்றிலை சாகுபடி வெகுவாக குறைந்துள்ளது. இதனால் வெற்றிலை விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் பஞ்சாயத்து யூனியனுக்குட்பட்ட டெல்டா பகுதிகளான, லாலாப்பேட்டை, மகாதானபுரம், திருக்காம்புலியூர், பிள்ளப்பாளையம், மகிளிப்பட்டி, கருப்பத்தூர், மாயனூர் ஆகிய இடங்களில் உள்ள விவசாய நிலங்களுக்கு, மாயனூர் காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர், கட்டளை புதிய வாய்க்கால், மேட்டு வாய்க்கால், தென்கரை வாய்க்கால் ஆகிய கிளை வாய்க்கால்கள் மூலம் பாசன வசதி பெருகின்றன.

இதன்மூலம் வாழை, வெற்றிலை ஆகிய பணப்பயிர்களை, விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். இப்பகுதியில் பச்சை, கற்பூரம், வெள்ளை கொடி ஆகிய வெற்றிலை ரகங்கள், 500 ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு வந்தது. இங்கிருந்து மாயிலாடுதுறை, கும்பகோணம், திருச்சி, வேலூர் ஆகிய பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

மேட்டூர் அணையிலிருந்து, தண்ணீர் திறந்து விடாத காரணத்தால், பருவமழை பொய்த்து போனதால், சாகுபடிக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. இதன்காரணமாக, 300 ஏக்கர் நிலத்தில் மட்டும் இந்தாண்டு வெற்றிலை சாகுபடி செய்யப்பட்டது. இப்பயிருக்கு தண்ணீர் நின்று கொண்டு இருக்க வேண்டும்.

அடிக்கடி புதிய நீரை பாய்ச்ச வேண்டும். இல்லையெனில் வெற்றிலை கொடிக்கால் காய்ந்து விடும். போர்வெல் நீரை பயன்படுத்தி சாகுபடி செய்ததில், 100 ஏக்கர் நிலத்தில் உள்ள வெற்றிலை மட்டுமே விவசாயிகளால் காப்பாற்ற முடிந்தது. தற்போது உற்பத்தி குறைவின் காரணமாக வெற்றிலை விலை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது:

கோவில் திருவிழாக்கள் பல்வேறு பகுதிகளில் நடந்து வருவதால், வெற்றிலைக்கு தேவை அதிகரித்து வருகிறது. ஆனால், விளைச்சல் வீழ்ச்சியால், 100 கவுளி கொண்ட வெற்றிலை

மூட்டைக்கு 3,500 ரூபாய் முதல் 4,200 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், கடந்த மாதம் மூட்டை, 2,500 ரூபாய் விற்கப்பட்டு வந்தது.
பொதுவாக, வியாபாரிகள் நேரடியாக வந்து வெற்றிலை கொள்முதல் செய்வது வழக்கமாகும். ஆனால், தொடர் விலையேற்றம் காரணமாக விவசாயிகள், திருச்சி மார்க்கெட்டுக்கு சென்று விற்பனை செய்து வருகின்றனர். மேலும் விலை அதிகரித்து வருவதால், விவசாயிகள் எதிர்பார்ப்புடன் உள்ளனர்.
இவ்வாறு அவர்கள் கூறினர்.

## வாழப்பாடி பகுதியில் கடும் வறட்சி கறவை மாடுகளை விற்கும் பரிதாபம்

வாழப்பாடி: வாழப்பாடி பகுதியில் நிலவும் கடும் வறட்சியால், கறவைமாடு வளர்ப்பு தொழில் நலிந்து வருகிறது.
விளை நில களைச்செடிகளையும், வைக்கோல் மற்றும் சோளத்தட்டை ஆகியவற்றையும் தீவனமாக உட்கொண்டும், குறைந்த பாரமரிப்பில், கணிசமான வருவாய் கொடுப்பதால், வாழப்பாடி பகுதி கிராமங்களில், பெரும்பாலான விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர்களும், கறவைமாடுகளை வளர்த்து வருகின்றனர்.
கிராமங்கள் தோறும் கொள்முதல் நிலையம் அமைத்து, அரசு மற்றும் தனியார் பால் நிறுவனங்கள், விவசாயிகளிடம் பால் கொள்முதல் செய்கின்றனர். வாழப்பாடி அடுத்த கருமாபுரம், ராமலிங்கபுரம், முத்தம்பட்டி மற்றும் ஏத்தாப்பூரில் செயல்படும் தனியார் பால் நிறுவனங்கள், நறுமணப்பால், நெய், ஐஸ்கிரீம் உற்பத்தி செய்து, தமிழகம் மட்டுமின்றி, நாட்டின் பல்வேறு பகுதிக்கு, ஏற்றுமதி செய்கின்றனர்.
இந்நிலையில், ஓராண்டாக, வாழப்பாடி பகுதியில், கடும் வறட்சி ஏற்பட்டு விளை நிலங்கள், பொட்டல்காடாக மாறின. பல கிராமங்களில், குடிநீருக்கே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அதனால், கறவை மாடுகள் வளர்ப்போர், மேய்ச்சலுக்கு வழியின்றி அவதிப்படுகின்றனர்.
இதற்கிடையே, மாட்டுத் தீவனம், கருக்கா தவிடு, புண்ணாக்கு பருத்திக்கொட்டை, மரவள்ளி திப்பி, மக்காச்சோள கழிவு உள்ளிட்ட தீவனங்களின் விலையும், இருமடங்காக உயர்ந்துள்ளது. அதனால், வாழப்பாடி பகுதி விவசாயிகள், கறவை மாடுகளை பராமரிக்க முடியாமல், விற்பனை செய்து வருகின்றனர்.
அதனால், கறவை மாடு வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தி தொழில் நலிந்து வருகிறது. வாழப்பாடி புதுப்பாளையம் பால் கூட்டுறவு சங்கத்தில், தினந்தோறும், 2,500 லிட்டர் பால் கொள்முதல் செய்து வந்த நிலைமாறி, தற்போது, 1,800 லிட்டருக்கும் குறைவாகவே வருகிறது.

## மக்கர்! கம்ப்யூட்டர் சிட்டா வழங்கும் இயந்திரம்... நாமக்கல் விவசாயிகள் பெரும் அவதி

நாமக்கல்: நாமக்கல் தாலுகா அலுவலகத்தில் உள்ள கம்ப்யூட்டர் சிட்டா வழங்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளது. அதனால், பல்வேறு கிராமங்களில் இருந்து, நாள்தோறும் தாலுகா அலுவலகம் வரும் விவசாயிகள், சிட்டா அடங்கல் பெற முடியாமல், பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

நாமக்கல் தாலுகா அலுவலக வளாகத்தில், நில அளவையர் பிரிவு உள்ளது. அங்கு, விவசாய நிலம் உள்ளிட்டவற்கு கம்ப்யூட்டர் சிட்டா வழங்கப்படுகிறது. நிலத்தின் சர்வே எண் தெரிவிப்பதுடன், 20 ரூபாய் கட்டணம் செலுத்தினால், கம்ப்யூட்டர் சிட்டா வழங்கப்படும்.

தற்போது, வறட்சியால் பாதிக்கப்பட்ட விளை நிலங்களுக்கு, அரசு நிவாரணத் தொகை வழங்க உள்ளது. வறட்சி நிவாரணத் தொகை பெறுவதற்கு, கம்ப்யூட்டர் சிட்டா அவசியம். எனவே, நாமக்கல் தாலுகாவுக்கு உட்பட்ட விவசாயிகள், சில வாரங்களாக கம்ப்யூட்டர் சிட்டா கேட்டு, நாமக்கல் தாலுகா அலுவலகத்தில், குவிந்து வருகின்றனர்.

எனினும், சிட்டா வழங்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால், விவசாயிகளுக்கு கம்ப்யூட்டர் சிட்டா வழங்க முடியாத சூழல் உருவாகியுள்ளது. அதனால், நாமக்கல் தாலுகாவின் பல பகுதியில் இருந்து வரும் விவசாயிகள், சிட்டா அடங்கல் பெற முடியாமல், பெரும் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் சிலர் கூறியதாவது:

வறட்சி பாதித்த விளை நிலங்கள் கணக்கிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட விளை நிலங்களுக்கு, அதன் பாதிப்புக்கு தகுந்தாற்போல், இழப்பீடு வழங்கப்பட உள்ளது. அதற்கு, கம்ப்யூட்டர் சிட்டா வழங்க வேண்டும். எனினும், தாலுகா அலுவலகத்தில், கம்ப்யூட்டர் சிட்டா வழங்கும் இயந்திரம் பழுதடைந்துள்ளதால், சில நாட்களாக சிட்டா பெற முடியாமல், வீணாக வந்து செல்ல வேண்டிய நிலை உள்ளது.

நாமக்கல் தாலுகா முழுவதுக்கும், இங்கு தான் பட்டா வழங்கப்படுகிறது என்பதால், நாள்தோறும் ஏராளமான விவசாயிகள் வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

நில அளவையர் பிரிவு அலுவலர்கள் கூறியதாவது:

ஆன்-லைன் முறையில் கம்ப்யூட்டர் சிட்டா வழங்கப்படுகிறது. நாமக்கல் தாலுகாவில் உள்ள, 120 கிராம மக்களும், இங்கு வந்து சிட்டா பெற வேண்டும். பட்டா எண் மற்றும், 20 ரூபாய் கட்டணம் செலுத்தினால், உடனடியாக சிட்டா வழங்கப்படும்.

சில தினங்களாக, ஆன்-லைனில் ஏற்படும் பிரச்னை காரணமாக, விரைந்து சிட்டா வழங்க முடியவில்லை. விவசாயிகளுக்கு இப்பிரச்னை பற்றி தெரிவிக்கப்படுகிறது. ஆன்-லைனில் ஏற்பட்ட பழுது, விரைந்து சரி செய்யப்படும். பின்னர், உடனடியாக அனைவருக்கும் வழங்கப்படும். கூடுதல் சிட்டா வேண்டுமெனில், 80 ரூபாய் செலுத்த வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**3.04.2013 A.M**

---

## நீலகிரி மாவட்டத்தில் உழவர் திருவிழா

ஊட்டி,

நீலகிரி மாவட்டத்தில் உள்ள பல்வேறு இடங் களில் நடைபெற்ற உழ வர் பெரு விழாவில் விவ சாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கரு விகள் வழங்கப்பட்டது.

உழவர் திருவிழா

ஊட்டி அருகே உள்ள இரிய சீகை கிராமத்தில் உழவர் திரு விழா நடைபெற்றது. இந்த விழாவிற்கு ஊர் தலைவர் ஆரிகவுடர் தலைமை தாங்கி னார். இதில், கிண்ணக்கொரை ஊராட்சி தலைவர் வனிதா முன்னிலை வகித்தார். இந்த விழாவில் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் ராஜேந்திரன், கால்நடை பராமரிப்பு துறை உதவி டாக்டர் ஜெயக்குமார், வேளாண்மை விற்பனை துறை உதவி வேளாண்மை அலுவலர் ராஜ்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதையடுத்து, மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 25 சதவீத மானியத்தில் வேளாண் கருவிகளும், நுண் ணீர் பாசன திட்டத்தின் கீழ் 100 சதவீத மானியத்தில் தெளிப்பு நீர் பாசன கருவிக ளும் வழங்கப்பட்டது.

குந்தா கோத்தகிரி கிராமம்

பிக்கட்டி வருவாய் கிராமத் தில் நடைபெற்ற உழவர் திரு விழாவில் ஊர் தலைவர் பெள் ளன் தலைமை தாங்கினார். பிக்கட்டி ஊராட்சி தலைவர் ஜெயமணி முன்னிலை வகித் தார். இந்த விழாவில் முன் னோடி விவசாயி பொன்னன், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் ராஜேந்திரன், கால்நடை பரா மரிப்பு துறை உதவி டாக்டர் ஜெயக்குமார், வேளாண் விற் பனை துறை உதவி வேளாண்மை அலுவலர் பரம சிவம் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

மஞ்சூர் கிராமம்

இதே போல் மேல்குந்தா வருவாய் கிராமம் மஞ்சூர் கிராமத்தில் நடைபெற்ற விழாவிற்கு ஊர் தலைவர் ராஜி தலைமை தாங்கினார். மேல்குந்தா ஊராட்சி தலை வர் ஜெயா முன்னிலை வகித் தார். இந்த விழாவில் தோட் டக்கலை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் ராஜேந்தி ரன், கால்நடை பராமரிப்பு துறை உதவி டாக்டர் ஜெயக் குமார், வேளாண்மை பொறியி யல் துறை இளநிலை பொறியா ளர் ராதாகிருஷ்ணன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். விழாவில் டிரை கோடெர்மா விதை நேர்த்தி, மண் மாதிரி எடுத்தல், நேரடி உரங்கள் பற்றிய செயல் விளக் கங்கள் அளிக்கப்பட்டது.

இந்த விழாவுகளுக்கான ஏற்பாடு களை ஊட்டி வட் டார தோட்டக்கலை உதவி இயக்குனர் மீராபாய், துணை வேளாண்மை அலுவலர்கள், உதவி வேளாண்மை அலுவலர் கள் மற்றும் அட்மா திட்ட அலு வலர்கள் செய்து இருந்தனர்.

## மகாராஜபுரம் ஊராட்சியில் மானிய விலையில் உழவு எந்திரம் சக்தி எம்.எல்.ஏ. வழங்கினார்

கொள்ளிடம்,

மகாராஜபுரம் ஊராட்சியில் விவசாயிகளுக்கு மானிய விலையில் உழவு எந்திரங்களை சக்தி எம்.எல்.ஏ. வழங்கினார்.

உழவர் பெருவிழா

நாகை மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம் மகாராஜபுரம் ஊராட்சியில் உழவர் பெருவிழா நடந்தது. விழாவிற்கு ஊராட்சி மன்றத் தலைவர் ஜீவமணி சீனிவாசன் தலைமை தாங்கினார். மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் ஜெயராமன், கொள்ளிடம் ஒன்றியக் குழுத்தலைவர் மீனா, மாவட்ட தோட்டக்கலை துறை இணை இயக்குனர் கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கொள்ளிடம் வேளாண்மை உதவி இயக்குனர் பால்ராஜ் வரவேற்று பேசினார். இதில் சக்தி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கு மானிய விலையில் உழவு எந்திரம் மற்றும் விவசாய உபகரணங்கள் வழங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

2-வது பசுமை புரட்சி

முதல்-அமைச்சர் விவசாயிகள் பொருளாதாரத்தில் வளர்ச்சி அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் 2-வது பசுமை புரட்சியை ஏற்படுத்தும் வகையில் ஊராட்சி தோறும் உழவர் பெருவிழா நடத்த உத்தரவிட்டுள்ளார். இந்த உழவர் பெருவிழாவில் வேளாண்மையில் நவீன தொழில்நுட்பம்

மற்றும் பணப்பயிர் சாகுபடி, தோட்டக்கலை பயிர் சாகுபடிகள் குறித்த விளக்கங்கள் அளிக்கப்படுகிறது. இதில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும். வருகிற ஜுன் மாதம் காவிரியில் இருந்து 416 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதனால் டெல்டா மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் அதிக அளவில்பயன் அடைவார்கள். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மாவட்ட பொருளாளர் சீனிவாசன், வேளாண்மை பொறியியல் துறை அலுவலர் சவுந்தரராஜன், அட்மா தொழில்நுட்ப மேலாளர் ரேக்கா, விரிவாக்க அலுவலர்கள் மகேஷ், சந்திரசேகரன், ராமச்சந்திரன், வேதை ராஜன் உள்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் வேளாண்மை விரிவாக்க அலுவலர் கனகராஜ் நன்றி கூறினார்.

## உழவர்சங்கங்களின் கூட்டமைப்பு ஜமாபந்தியை புறக்கணிக்க போவதாக அறிவிப்பு வறட்சி மாவட்டமாக அறிவிக்க கோரிக்கை

வந்தவாசி,

திருவண்ணாமலை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அரசு அறிவிக்காததால் ஜமா பந்தியை புறக்கணிக்க போவதாக தமிழக உழ வர் சங்கங்களின் கூட் டமைப்பு தெரிவித்துள்ளது.

செயற்குழு கூட்டம்

திருவண்ணாமலை மாவட் டம் வந்தவசி வட்டார தமிழக உழவர் சங்கங்களின் கூட்ட மைப்பின் செயற்குழு கூட்டம் கீழ்கொவளைவேடு கிராமத் தில் நடந்தது. கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் வி.ஜி. புருஷோத்தமன் தலைமை தாங்கினார். விவசாயிகள் எம்.மணி, நாராயணன், தேவராஜ், ரகுபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் வரு மாறு:-
வறட்சி மாவட்டமாக...

வேளாண் ஆராய்ச்சிக்கு குறைவான நிதி ஒதுக்கீடு செய்வதால் புதிய வேளாண் கண்டுபிடிப்பு, பருவகால மாறுதலுக்கு ஏற்ப புதிய ரக விதைகள் கண்டு பிடிக்கப் பட வில்லை. எனவே பாராளு மன்ற நிலை குழு உறுப்பினர் கள் முறையீடுசெய்து வேளாண் ஆராய்ச்சி மற்றும் வேளாண் துறைக்கு கூடுதல் நிதி ஒதுக்க வேண்டி மத்திய அரசுக்கு வேண்டுகோள் வைத்து உள்ளதை இக்கூட்டம் பாராட்டுகிறது.

வேளாண்துறைக்கு தனி பட்ஜெட் போட மத்திய மாநில அரசுகள் முன்வர வேண்டும். தமிழகத்தில் சென்னை நீங்கலாக பிற மாவட்டங்களை வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்த நிலையில் திரு வண்ணாமலை மாவட்டம் வறட்சி மாவட்ட பட்டியலில் இடம் பெறவில்லை.

புறக்கணிக்க முடிவு

இதனை கண்டித்து வருகிற ஜமாபந்தி கூட்டங்களை புறகணிப்பு செய்வது என்பது உள்பட பல்வேறு தீர்மானங் கள் நிறைவேற்றப்பட்டன.